In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : MCOP/125-2022

Deposition of .RW.1

****

Name லிவிங்க்ஸ்டன்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 11th day of December 2024.

**முதல் விசாரணை :**

நான் தற்போது புன்னக் காயல் அருகில் DCW வொர்க்கர்ஸ் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் 20.05.2019 அன்று தூத்துக்குடியிலிருந்து வீட்டுக்கு மகேந்திரா லோகன் காரில் சென்று கொண்டிருக்கும் போது கக்கன்ஜி நகருக்கு அருகில் போய்க் கொண்டிருந்த போது, வேகமாக ஒரு பைக் வண்டியின் பின்னால் மோதியது. நான் ஓட்டிச் சென்ற வாகன எண் TN69 S1171 ஆகும். எனது வாகனத்தின் நிறம் கிரே ஆகும். இந்த விபத்திற்கு பின்னாடி ஓட்டி வந்த எனது காரை இடித்த பைக் நபர் தான் காரணம் என்றால் சரிதான். எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி நான் சென்று கொண்டிருந்தேன் எனக்கு தெரியவில்லை.

**குறுக்கு விசாரணை :(மனுதாரருக்காக)**

நான் சொன்ன தேதியில் மதியம் 2.15 மணிக்கு விபத்து நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது இறந்து போன நபரைத் தவிர வேறு யாரும் இருந்தார்களா என்றால் அந்த ஊர் மக்கள் இருந்தார்கள். சம்பவ இடத்தில் நான் பத்து நிமிடம் இருந்தேன். விபத்து நடந்த பத்து நிமிடம் கழித்து நான் முத்தையாபுரம் காவல்

RAMANUJAM VASANTHI Digitally signed by RAMANUJAM VASANTHI Date: 2024.12.11 17:26:40 +0530

நிலையத்திற்கு எனது வண்டியை திருப்பிக் கொண்டு போனேன். நான் காவல் நிலையத்தில் தகவல்களை அளித்து FIR பதிவு செய்யப்பட்டது. அந்த நிலையத்தில் நான் ஒரு கையெழுத்து மட்டுமே போட்டேன். நான் நிலையத்திலிருந்து மாலை 6.30 மணிக்கு மேல் வெளியே சென்றேன். அது வரை காவல் நிலையத்தில் தான் இருந்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் மட்டுமே புகார் அளித்தேன். வேறு யாரும் அளிக்கவில்லை. விபத்து ஜாய் என்ற ஹோட்டலுக்கு அருகில் தான் விபத்து நடந்தது. அந்த ேஹாட்டல் கிழக்கு பக்கம் தான் இருக்கிறது. நான் மதிய வேளையில் பசியுடன் இருந்ததால் சாப்பிடுவதற்காக எதிர்புறம் இருந்த ேஹாட்டலுக்கு செல்வதற்கு எந்த சிக்னலும் இல்லாமல் வண்டியைத் திருப்பேனா என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை என்பதால் தவறான தகவலுடன் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கு நான் தான் முழு காரணம் என்றாலும் எந்த வித சிக்னலும் இல்லாமல் வேகமாக வண்டியைத் திருப்பியது தான் காரணம் என்றாலும் சரியல்ல. என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விடக்கூடாது என்பதற்காக நான் காவல் நிலையத்தில் உடனடியாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் குற்ற வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யான தகவலுடன் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2024.12.11 17:26:53 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**